தினமணி

## இன்றைய வேளாண் செய்திகள்

### 7 இடங்களில் 100 டிகிரி வெயில்



**சென்னை,**

தமிழகத்தில் ஏழு இடங்களில் செவ்வாய்க்கிழமை (ஏப்.22) 100 டிகிரிக்கும் மேல் வெயில் சுட்டெரித்தது. மாநிலத்திலேயே அதிகபட்சமாக மதுரையில் 103 டிகிரி வெயில் வாட்டி வதைத்தது.

இதைத் தவிர தருமபுரி, கரூர் பரமத்திவேலூர், பாளையங்கோட்டை, சேலம், திருச்சி, வேலூர் உள்ளிட்ட பகுதிகளிலும் 100 டிகிரி வெயில் பதிவானது.

மாநிலம் முழுவதும் கோடை வெயிலின் தாக்கம் மக்களை வாட்டி வதைக்கும் நிலையில் வெப்பச் சலனம் காரணமாக ஒரு சில இடங்களில் புதன்கிழமை (ஏப்.23) மழை பெய்ய வாய்ப்புள்ளதாக வானிலை முன்னறிவிப்பில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

செவ்வாய்க்கிழமை பதிவான வெயில் அளவு (டிகிரி ஃபாரன்ஹீட்டில்):-

மதுரை 103

சேலம் 102

தருமபுரி, கரூர்,

பரமத்திவேலூர்,

வேலூர், திருச்சி 101

பாளையங்கோட்டை 100

சென்னை 95

கொடைக்கானல் 71

## பல்லடம் கறிக்கோழி: கொள்முதல் விலையில் மாற்றமில்லை

**பல்லடம்,**

தமிழகம் மற்றும் கேரள மாநிலங்களில் கறிக்கோழி விற்பனை மார்க்கெட் நிலவரத்துக்கேற்ப திருப்பூர் மாவட்டம், பல்லடத்தை தலைமையிடமாகக் கொண்டு செயல்படும் பி.சி.சி. (பிராய்லர் கோர்டினேஷன் கமிட்டி) தினந்தோறும் கறிக்கோழி பண்ணைக் கொள்முதல் விலையை நிர்ணயம் செய்கிறது. திங்கள்கிழமை பண்ணைக் கொள்முதல் விலை கிலோ ரூ. 68-ஆக இருந்தது. விற்பனையில் மாற்றம் எதுவும் இல்லாததால் செவ்வாய்க்கிழமையும் அதே விலை நிர்ணயம் செய்யப்பட்டது.

முட்டை விலை: நாமக்கல் மண்டல தேசிய முட்டை ஒருங்கிணைப்புக் குழு செவ்வாய்க்கிழமை அறிவித்த முட்டை பண்ணைக் கொள்முதல் விலை நாமக்கல்லில் ரூ.2.66, சென்னையில் ரூ.3.

## பரமத்திவேலூர் ஏலச் சந்தையில் வெற்றிலை விலை உயர்வு

**பரமத்திவேலூர்,**

பரமத்திவேலூர் ஏலச் சந்தையில் திங்கள்கிழமை வெற்றிலையின் விலை உயர்ந்ததால் விவசாயிகள் மகிழ்ச்சி அடைந்துள்ளனர்.

பரமத்திவேலூர் சுற்றுவட்டாரப் பகுதிகளில் ஏராளமான ஏக்கரில் வெற்றிலை பயிர் செய்யப்பட்டுள்ளது.

இந்தப் பகுதியில் வெள்ளைக்கொடி வெற்றிலை, கற்பூரி வெற்றிலை ஆகியவை பயிர் செய்யப்பட்டு வருகின்றன. இங்கு விளையும் வெற்றிலைகள் பரமத்திவேலூர் நான்கு சாலையில் நடைபெறும் வெற்றிலை ஏலச் சந்தைக்கு கொண்டு வரப்பட்டு

ஏலம் விடப்படுகின்றன. திருச்சி, கரூர் ஆகிய மாவட்டங்களில் இருந்தும் வெற்றிலைகள் ஏலத்துக்கு கொண்டு வரப்படுகின்றன. இங்கு ஏலம் எடுப்பதற்கு தமிழகத்தின் பல்வேறு மாவட்டங்களில் இருந்தும், கேரளத்தில் இருந்தும் வியாபாரிகள் வந்து செல்கின்றனர்.

கடந்த வாரம் நடைபெற்ற ஏலத்தில் (104 கவுளிகள் கொண்ட சுமை ஒன்று) வெள்ளைக்கொடி இளம்பயிர் வெற்றிலை ரூ.3,500-க்கும், கற்பூரி வெற்றிலை இளம்பயிர் ரூ.2,500-க்கும் ஏலம் போனது.

முதியம் பயிர் வெள்ளைக்கொடி வெற்றிலை சுமை ஒன்று ரூ.1000-க்கும், முதியம் பயிர் கற்பூரி வெற்றிலை சுமை ஒன்று ரூ.750-க்கும் ஏலம் போனது. திங்கள்கிழமை நடைபெற்ற ஏலத்தில் வெள்ளைக்கொடி இளம்பயிர் வெற்றிலை ரூ.4,500-க்கும் , கற்பூரி வெற்றிலை இளம்பயிர் ரூ.3,500-க்கும் ஏலம் போனது.

முதியம் பயிர் வெள்ளை வெற்றிலை சுமை ஒன்று ரூ.1500-க்கும், முதியம் பயிர் கற்பூரி வெற்றிலை சுமை ஒன்று ரூ.1500-க்கும் ஏலம் போனது. தற்பொழுது தண்ணீர் வரத்து குறைந்துள்ளதால், வெற்றிலை உற்பத்தி பாதிக்கப்பட்டுள்ளது. இதனால், ஏலச் சந்தைக்கு வெற்றிலை வரத்து குறைந்துள்ளது. இதன் காரணமாக வெற்றிலை விலை உயர்ந்துள்ளதாக வியாபாரிகள் தெரிவித்தனர்.

**வாரச்சந்தை வெள்ளிக்கிழமை நடைபெறும்**

**கரூர்,**

கரூர் மாவட்டத்தில் வியாழக்கிழமை நடைபெறும் வாரச்சந்தை வெள்ளிக்கிழமை நடைபெறும் என அறிவிக்கப்பட்டுள்ளது.

இதுகுறித்து மாவட்ட நிர்வாகம் வெளியிட்ட செய்திக் குறிப்பு:

கரூர் மாவட்டத்தில் பழைய ஜெயங்கொண்டசோழபுரம், மருதூர், புன்செய் புகளூர், அரவக்குறிச்சி பேரூராட்சிகளில் வியாழக்கிழமை நடைபெறும் வாரச் சந்தை மக்களவைத் தேர்தல் காரணமாக வெள்ளிக்கிழமை (ஏப். 25) நடைபெறும் என்று தெரிவிக்கப்பட்டுள்ளது.

**மேட்டூர் அணையின் நீர்மட்டம்**

**தஞ்சாவூர்,**

மேட்டூர் அணையின் நீர்மட்டம் செவ்வாய்க்கிழமை மாலை 38.03 அடியாக இருந்தது. அணைக்கு நொடிக்கு 617 கன அடி வீதம் தண்ணீர் வந்து கொண்டிருந்தது. அணையிலிருந்து நொடிக்கு 5,998 கன அடி வீதம் தண்ணீர் திறந்து விடப்படுகிறது. கல்லணையில் தண்ணீர் திறக்கப்படவில்லை.

தினமலர்

**இன்றைய வேளாண் செய்திகள்**

முயல் வளர்ப்பு



இரண்டு பெண் முயல்கள், ஒரு ஆண் முயல் என மூன்று முயல்கள் மூலம் மூன்றே மாதங்களில் எமது இல்லத்தில் ஒரு "மினி முயல் பண்ணையே' உருவானது என்றால் யாரும் எளிதில் நம்ப மாட்டார்கள். ஏன், முதலில் நாமே அதை நம்ப முடியவில்லை. ஆனால் அந்நிகழ்வு சாத்தியமானது. மேலும் வீட்டிலே வளரும் கலர் கலரான, "பொசு பொசு'வென உள்ள இந்த முயல் குட்டிகளால் குழந்தைகள் வீட்டில் உள்ள அனைவருக்கும் பரவசமான மகிழ்ச்சி கிடைப்பதோடு கணிசமான வருமானமும் கிடைக்கிறது என்பது தான் ஹைலைட் மேட்டர்.

ஆமாம். ஒரு கல்லில் இரண்டு மாங்காய் கிடைத்த சந்தோஷம். எப்படி? நம் வீட்டில் உள்ள குட்டீஸ் (குழந்தைகள்)களுக்காக ராமநாதபுரத்தில் உள்ள

"வீட்டு வளர்ப்பு பறவைகள், பிராணிகள் நிலையத்தில் இரண்டு பெண் முயல்கள் (ஒரு கறுப்பு, ஒரு வெள்ளை), ஒரு ஆண் முயல் என மூன்று முயல்களை வெறும் 900 ரூபாய்க்கு கடந்த நான்கு மாதங்களுக்கு முன் வாங்கி வந்தோம். முயல்களை நம்மிடம் தந்த கடைக்காரர். இன்னும் ஓரிரு வாரங்களில் பெண் முயல்கள் இரண்டும் குட்டிகள் போடும் என்றார். கடைக்காரர் சொன்னது போலவே, இரண்டு வாரங்களில் பெண் முயல்கள் இரண்டும் தலா 8 குட்டிகள், 5 குட்டிகள் என 13 மூன்று அழகான குட்டிகளை ஈன்று வீட்டில் உள்ள அனைவரையும் ஆச்சரியப்படுத்தியதுடன் மகிழ்ச்சியிலும் ஆழ்த்தியது. குட்டி முயல்கள் வளர்ந்து வரும் நிலையில், அடுத்த 40 நாட்களில் அந்த தாய் பெண் முயல்கள் மீண்டும் 12 குட்டிகளை ஈன்றது. கறுப்பு நிறம், வெள்ளை நிறம், கோல்டு நிறம், செந்நிறம் என பல வர்ணங்களில் வலம் வரும் இந்த அழகிய முயல்குட்டிகளை நமது இல்லத்தில் பார்க்க வருபவர்கள், ஒரு ஜோடி முயல் குட்டிகள் ரூ.500க்கு பிரியமாக வாங்கிச் செல்கிறார்கள். இப்பொழுது நம் வீட்டில் முயல் குட்டிகள் வருமானத்திற்கென "ஒரு உண்டியலே' வைக்கப்பட்டுள்ளது. பெரிய இடம் வேண்டாம், இதற்கென ஒரு தோட்டம் வேண்டாம். வீட்டின் கிணற்றுக்கு அருகிலோ அல்லது சின்னதா காலியிடமோ நமது வீட்டில் இருந்தால் 6X4 என்ற அளவிலோ, 10X5 என்ற அளவிலோ ஒரு மரக்கூடு அமைத்து, முகப்பில் மட்டும் கம்பி வலை பொருத்தினால் போதும். மேலும் தாய் முயல்கள் குட்டி ஈன வசதியாக ஒரு துளையிட்ட மண்பானையை அந்த மரக்கூட்டின் ஓரத்தில் (சிறிதளவு சுத்தமான மணல் பரப்பி) வைத்து விட வேண்டும். 30லிருந்து 40 நாட்களுக்குள் தாய் முயல்கள் தொடர்ச்சியாக குட்டிகளை ஈன்று கொண்டிருக்கும். மேலும் நம் வீட்டில் முயல் வளர்ப்பதற்காக பராமரிப்பு செலவு என்பது பெரியதாக ஒன்றும் இல்லை. எல்லா அரிசி கடைகளிலும் முயலுக்கு என (கிலோ ரூ.25) தீவனம் விற்கிறார்கள். அத்துடன் காலிபிளவர் இலைகள், கேரட், முட்டைக்கோஸ் இலைகளையும், நல்ல வளர்ச்சியுள்ள புற்களையும் முயல்களுக்கு உணவாகக் கொடுத்தால் நல்ல ஆரோக்கியத்துடன் வளரும். ஆர்வமுள்ள அனைவரும் தங்களது வீட்டிலேயே முயல்களை வளர்க்க முன்வந்தால், நல்ல பொழுதுபோக்கு கிடைப்பதோடு, கணிசமான வருமானமும் கிடைக்கும்.

**எம்.முகமது அனீஸ்,**

**பனைக்குளம் -623 522.**

**94424 51608**

நவீன தொழில்நுட்பம்



**குதிரை மசால் கோ.2:** தீவனப்பயிர்களின் இராணி என்று அழைக்கப்படும் குதிரைமசால் புரதச் சத்திற்காகவும், அதிக சுவைக்காகவும் கால்நடைகளால் பெரிதும் விரும்பி உண்ணப்படுகின்றது. குதிரைமசால் ஒரு பல்லாண்டு காலப்பயிராகும். தமிழ் நாட்டில் கோயம்புத்தூர், திருப்பூர், ஈரோடு, கிருஷ்ணகிரி, தேனி ஆகிய மாவட்டங்களில் பரவலாக பயிரிடப்பட்டு வருகிறது. தமிழ்நாடு வேளாண்மை பல்கலைக்கழகம் தீவனப்பயிர் துறையிலிருந்து குதிரைமசால் கோ.2 என்ற புதிய இரகத்தை கடந்த ஆண்டு வெளியிட்டது. தற்போது சாகுபடியில் உள்ள கோ.1 இரகம் 1980ம் ஆண்டு வெளியிடப்பட்டது. குதிரை மசால் கோ.2 சராசரி பசுந்தீவன விளைச்சலாக ஒரு ஆண்டில் எக்டருக்கு 130.6 டன் கொடுத்துள்ளது. இது கோ.1 இரகத்தை விட 25.9 சதம் அதிகமாகும். பசுந்தீவன விளைச்சலும் அதன் தரமும் ஒருங்கே ஏற்ற முகத்துடன் இணையப்பெற்றது இந்த புதிய இரகத்தின் சிறப்பாகும். அதிக புரதச்சத்தை (23.5 சதம்) கொண்டுள்ளதால் அதிக புரத விளைச்சலுக்கு (5.16 டன் /எக்டர்/வருடம்) ஏதுவாகின்றது. இதன் உலர் எடை விளைச்சல் ஒரு எக்டருக்கு ஒரு ஆண்டில் 21.94 டன் ஆகும். இது கோ.1 (20 சதம்)ஐ விட சற்றே குறைந்தளவு நார்ச்சத்தை (19.2 சதம்) கொண்டுள்ளதால் அதிக செரிமானத்திற்கு ஏற்றதாக உள்ளது. நுண்ணூட்டச்சத்துக்களான இரும்பு, துத்தநாகம், தாமிரம் கோ.1ஐக் காட்டிலும் அதிக அளவில் உள்ளது. இதன் பச்சைய அளவும் அதிகமாக உள்ளதால் ஏற்றுமதி வர்த்தகத்திற்கு ஏற்றது. அதிகத் தண்டுகள் (15.20) மிருதுவான கரும்பச்சை இலைகள், அதிக இலைக்காம்புகள் (9-11), இலைத்தண்டு விகிதம் (0.47) உடையதாக உள்ளது. இப்பண்புகளால் அதிக சுவையுடன் இருப்பதால் கறவை மாடுகள், செம்மறி ஆடுகள், ஆடுகள், ஈமுகோழிகள் மிகவும் விரும்பி

உண்ணுகின்றன.

குதிரை மசால் கோ.2ன் அடர்த்தியான, கொத்துக் கொத்தாக பூக்கும் திறன் கூடுதல் விதை உற்பத்திற்கு (18.2 சதம்) வழி வகுக்கிறது. இதன் சிறப்பு- விரைவாக தழைக்கும் திறன், குறுகிய காலத்தன்மையால் கூடுதல் அறுவடை மேற்கொள்ள வேண்டும்.

**சாகுபடி குறிப்புகள்:** ஆண்டு முழுவதும் இறவைப்பயிராகப் பயிரிடலாம். அதிக வெப்ப மண்டலப் பகுதிகளுக்கு ஏற்றதல்ல. வடிகால் வசதியுள்ள கரிசல் நிலம், களர் நிலங்களுக்கும் ஏற்றது.

இரண்டு முதல் மூன்று முறை உழவு செய்தபின் பாத்தியாக பிரிக்க வேண்டும். அடியுரம், தொழு உரம், 25 டன் /எக்டர் தழைச்சத்து 25 கிலோ, மணிச்சத்து 120 கிலோ, சாம்பல் சத்து 40 கிலோ அளிக்க வேண்டும்.

**விதை அளவு:** 15 கிலோ / எக்டர்

**இடைவெளி:** விதைகளை வரிசைக்கு வரிசை 25 செ.மீ இடைவெளி விட்டு தொடர்ச்சியாக விதைக்க வேண்டும். தேவைக்கு ஏற்ப களை எடுக்க வேண்டும். பயிர் பாதுகாப்பு பொதுவாக தேவையில்லை.

**நீர்ப்பாசனம்:** விதைத்தவுடன் நீர்ப்பாய்ச்சி, மூன்றாம் நாள் உயிர் தண்ணீர் கொடுத்த பிறகு 10 நாட்களுக்கு ஒருமுறை நீர்ப்பாய்ச்ச வேண்டும்.

**அறுவடை:** முதல் அறுவடை விதைத்து 60-65 நாட்களிலும் பின்னர் 20-25 நாட்களுக்கு ஒரு முறையும் செய்ய வேண்டும். பசுந்தீவன விளைச்சல் - 130 டன்கள்/ எக்டர் / ஆண்டு -(14 அறுவடைகளில்) தகவல் : முனைவர்கள் : ச.பாபு, சி.ஐயனார், அ.கலாமணி, தீவனப்பயிர்துறை, த.வே.ப.கழகம், கோவை-641 003. போன்: 0422 - 661 1228.

**- டாக்டர் கு.சௌந்தரபாண்டியன்.**

## எருமைகளில் கன்று ஈன்ற பின் ஏற்படும் கருப்பை பிதுக்கம் தீர்வுகள்



இப்பிரச்னை எந்தெந்த காரணங்களால் ஏற்படுகிறது என்று பார்ப்போம். கன்று ஈன்ற பின் அதிகப்படியான முக்குதல். மிகவும் தொய்வடைந்த நிலையில் இருக்கும் கருப்பை. நஞ்சுக்கொடி தங்குதல். மிகவும் விரிவடைந்த நிலையை அடையும் எருமை மாடுகளின் இடுப்புப் பகுதியும், அதனைச் சார்ந்த தசை நார்களும் கருப்பை வெளித்தள்ளுதலுக்கு மிகவும் முக்கிய காரணமாக அமைகின்றன. மேய்ச்சலுக்கு செல்லாமல் கட்டியே வைத்து பராமரிக்கப்படும் மாடுகளில் பாதிப்பு அதிகமாகக் காணப்படும்.

கன்று ஈன்ற பின் மாட்டின் பின்னங்கால் பள்ளத்திலும் முன்னங்கால்கள் உயர்ந்த பகுதியிலும் இருந்தால் கருப்பை வெளித்தள்ளுதல் உண்டாகும். கன்று ஈனமுடியாத மாடுகளில் கன்றை வெளியே எடுக்க முயற்சிக்கும் போது அதிகமான இழுதிறனைப் பயன்படுத்தினால் கருப்பை வெளித்தள்ளுதல் உண்டாகும். கன்று ஈன்றபின் கருப்பை நன்றாகச் சீக்கிரம் சுருங்க வேண்டும். அப்படி ஏதாவது ஒரு குறைபாட்டால் கருப்பை சுருங்குவதில் தாமதம் ஏற்பட்டால் கருப்பை பிதுக்கம் ஏற்பட வாய்ப்பு ஏற்படும். கன்று ஈன்றுவதில் தாமதம் ஏற்படும் போது கருப்பை இறந்து உலர்ந்த கன்றை அழுத்தமாகச் சுற்றிக்கொள்ளும் இறந்த கன்றை வெளியே இழுக்கும்போது கருப்பை வெளியே வந்துவிடும்.

அதிகமான கன்று ஈன்ற மாடுகளில் இப்பிரச்னை அதிக அளவில் ஏற்படும். தீவனப் பற்றாக்குறை மற்றும் பிற காரணங்களால் இளைத்துப் போன மாடுகளில் கருப்பை பிதுக்கம் உண்டாகும். பால் காய்ச்சலால் பாதிக்கப்படும் மாடுகளில் கருப்பைப் பிதுக்கம் ஏற்பட வாய்ப்புண்டு. கருப்பை பிதுக்கம் பரம்பரையாகத் தொடரும் பிரச்னையில்லை என்றாலும் அரிதாக பாதிக்கப்பட்ட மாடுகளின் கன்றுகள் வளர்ந்து கன்று ஈனும்போது அந்த மாடுகளிலும் ஏற்பட வாய்ப்பு உண்டு. கன்று ஈனுவதற்கு முன்பு கருப்பை வாய் பிதுக்கம் உண்டானால் கன்று ஈன்றபின் கருப்பை பிதுக்கம் ஏற்பட வாய்ப்பு குறைவுதான் என்றாலும் விவசாயிகள்

கருப்பைப் பிதுக்கம் ஏற்பட்டு விடும் என்ற நம்பிக்கை கொள்கிறார்கள். ஒருமுறை கருப்பைப் பிதுக்கம் ஏற்பட்ட எருமைகளில் அடுத்த முறை கன்று ஈனும் போதும் கருப்பைப் பிதுக்கம் ஏற்பட வாய்ப்பு குறைவு தான்.

**அறிகுறிகள்** : கருப்பை பிதுக்கம் ஏற்பட்ட எருமைகளில் அறிகுறிகள் கண்டுபிடிப்பது எளிதானதாகும். கருப்பை வெளித்தள்ளிய மாடுகள் பெரும்பாலும் படுத்துக்கொண்டு முக்கிக் கொண்டிருக்கும். அதே நின்ற நிலையில் இருந்தால் வரை தொங்கிக் கொண்டிருக்கும் பெரும்பாலும் நஞ்சுக்கொடி கருப்பையில் ஒட்டிக் கொண்டிருக்கும். கருப்பை மீது தீவனங்களும், மண், சாணம் போன்றவைகள் ஒட்டிக் கொண்டிருக்கும். வெகுநேரம் பாதிக்கப்பட்ட எருமைகளில் கருப்பை உலர்ந்து, வீங்கி, இரத்தப்போக்குடன் காணப்படும். இத்தகைய பாதிப்பு ஏற்பட்ட மாடுகளில் உடனடிச் சிகிச்சை அளிக்கப்படாவிட்டால் பிதுங்கிய கருப்பையின் இரத்தக் குழாய்கள் கிழிந்து எருமை இறக்க நேரிடும்.

**சிகிச்சை**: கருப்பை வெளித்தள்ளிய எருமைகளுக்கு உடனடியாகச் சிகிச்சை அளித்தால் எருமையின் உயிரையும் காப்பாற்றி அதன் சினைப்பிடிக்கும் திறனை இழக்காமல் பாதுகாக்க முடியும். கிராமப்புறங்களில் கால்நடை மருத்துவரை அழைக்காமல் எருமையின் இனப்பெருக்கம் தெரியாத அனுபவமற்ற நபர்களைக் கொண்டு சிகிச்சை அளிக்கும் போது கருப்பைக் கிழிந்த மாடு இறக்க நேரிடும். ஏனெனில் இது எருமையின் உயிருக்கே ஆபத்து ஏற்படுத்தும் பிரச்னையாகும். கால்நடை மருத்துவரை அழைப்பதற்கு முன் கருப்பை வெளித்தள்ளிய எருமைகளைக் கவனமாகப் பார்த்துக் கொள்ள வேண்டும். இல்லையென்றால் வெளித்தள்ளிய கருப்பையை நாய்கள் மற்றும் இதர பிராணிகள் சேதப்படுத்திவிடும். கால்நடை மருத்துவர் வரும்வரை வெளித்தள்ளிய கருப்பையை ஈரத்துணியால் மூடி வைக்க வேண்டும். நின்ற நிலையில் எருமைகள் இருந்தால் தொங்கிக் கொண்டிருக்கும் கருப்பையை கோணிப்பையால் தூக்கி பெண்ணின வெளிப்புற உறுப்பு வரை உயர்த்திப் பிடிக்க வேண்டும். இவ்வாறு செய்வதால் வெளித்தள்ளிய கருப்பைக்கு இரத்தம் தடையின்றி சென்று வருவதால் வீங்குவது தவிர்க்கப்படும்.

மேலும் மூத்திரப்பையில் சிறுநீர் சேகரமாவது தவிர்க்கப்பட்டு எருமையின் முக்கல் குறையும். எளிதான சிகிச்சை செய்ய எருமை மாட்டின் முன்புறம் தாழ்ந்தும் பின்புறம் உயர்ந்தும் இருந்தால் நல்லது. படுத்த நிலையில் உள்ள மாடுகளின் பின்புறத்தை வைக்கோல் நிரப்பப்பட்ட கோணிப்பையைக் கொண்டு

உயர்த்தினால் சிகிச்சைக்கு ஏதுவாக இருக்கும். இரவு நேரத்தில் இப்பிரச்னை ஏற்பட்டால் எருமைகளை நல்ல வெளிச்சம் உள்ள இடத்திற்கு மாற்ற வேண்டும். அல்லது எருமை இருக்கும் இடத்தில் மின்சார பல்புகளைக் கொண்டு நல்ல வெளிச்சம் உண்டாக்க வேண்டும்.

பகல் நேரமாக இருந்தால் வெளித்தள்ளிய கருப்பை மீது சூரியஒளி படாதவாறு ஈரத்துணியால் கருப்பையைச் சுற்றி வைக்க வேண்டும். கால்நடை மருத்துவர் தக்க சிகிச்சை அளித்து கருப்பையை உள்ளே தள்ளி சிகிச்சை செய்தவுடன் தண்ணீர் மற்றும் தீவனத்தை சிறிது சிறிதாக அடிக்கடி கொடுக்க வேண்டும். ஒரே வேளையில் நிறைய தீவனத்தைக் கொடுக்க வேண்டும். அடுத்தடுத்த நாட்களிலும் மருத்துவரைக் கொண்டு சிகிச்சை அளிக்க வேண்டும்.

**- முனைவர் ம.பழனிசாமி**
**இணைப் பேராசிரியர் மற்றும் தலைவர்**
**வேளாண் அறிவியல் நிலையம்,**
**குன்றக்குடி-603 206.**

## விலை உயரும் எலுமிச்சைப் பழம் கோடைக்கு முன்பே தட்டுப்பாடு

**கரூர்**: தமிழகத்தில் கடந்தாண்டு பருவமழை தவறியதால், எலுமிச்சைப் பழத்தின் வரத்து குறைந்துள்ளது. இதனால், எலுமிச்சைப் பழத்தின் விலை ஜெட் வேகத்தில் அதிகரித்து தட்டுப்பாடு ஏற்பட்டுள்ளது. கடந்தாண்டு தமிழகத்தில் வடகிழக்கு பருவமழை மற்றும் தென் கிழக்கு பருவமழை எதிர்பார்த்த அளவில் பெய்யவில்லை. இதனால், நெல், பயறு வகைகள் உள்ளிட்ட உணவு தானியங்களின் உற்பத்தி குறைய வாய்ப்புள்ளது. இந்நிலையில், பருவமழை தவறியதால், எலுமிச்சைப் பழத்தின் சாகுபடி குறைந்துள்ளது. தற்போது தமிழகத்தில் திண்டுக்கல், மதுரை, சேலம் மற்றும் ஆந்திரா மாநிலங்களில் இருந்தும் எலுமிச்சைப்பழம். கரூர் மாவட்டத்துக்கு விற்பனைக்காக கொண்டு வரப்படுகிறது. கடந்த மாதம் கிலோ, 80 ரூபாய் வரை விற்கப்பட்ட எலுமிச்சைப் பழம், சில்ல றையில் ஒரு பழம், இரண்டு ரூபாய் முதல், மூன்று ரூபாய் வரை விற்கப்பட்டது. கோடைக் காலம் துவங்கிய நிலையில், கரூர் மாவட்டத்துக்கு வழக்கமாக வரும் எலுமிச்சைப் பழம் வரத்து குறைந்துள்ளது. இதனால் மொத்த விலையில் தரத்துக்கு ஏற்ப கிலோவுக்கு, 20 ரூபாய் வரை அதிகரித்துள்ளது. இதுகுறித்து வியாபாரிகள்

கூறுகையில், ""எலுமிச்சைப் பழம் பொதுவாக மானாவரி நிலம், தோட்டப்பகுதிகள், வாய்க்கால் ஓரங்களில் சாகுபடி செய்யப்படுகிறது. தமிழகத்தை பொறுத்தவரை எலுமிச்சைப் பழங்கள் சாகுபடிக்காக, தனியாக தோட்டம் அமைப்பது குறைவு. மழையை நம்பிதான், எலுமிச்சைப் பழம் சாகுபடி செய்யப்படுகிறது. ஆனால், கடந்தாண்டு போதிய மழை இல்லாததால், எலுமிச்சைப் பழம் சாகுபடி குறைந்து விட்டது. இதனால், கரூருக்கு குறைந்தளவே எலுமிச்சைப் பழம் விற்பனைக்கு வருகிறது. இதனால், விலையும் சற்று அதிகரித்துள்ளது. ஆனால், கோடைகாலம் துவங்கியுள்ள நிலையில் தற்போது, எலுமிச்சைப் பழத்தின் விலை அதிகரித்துள்ளது. வரும், மே மாதம் கோடைக்காலத்தின் பாதிப்பு இருக்கும் நிலையில், எலுமிச்சைப் பழத்தின் விலை மேலும் உயர வாய்ப்புண்டு," என்றனர்.

## 'வாடியது' பூ விலை

**மதுரை** : மதுரை பூ வியாபாரிகள் சங்கத் தலைவர் சோ.ராமசந்திரன் கூறியதாவது: நேற்று மல்லிகை ரூ.100, கனகாம்பரம் ரூ.300, அரளி ரூ.60, செண்டுப்பூ ரூ.50, கோழிக்கொண்டை ரூ.50, பட்டன் ரோஸ் ரூ.150, ரோஜா ரூ.70, மரிக்கொழுந்து ரூ.40, துளசி ரூ.40, சம்பங்கி ரூ. 100க்கு விற்றது. பிச்சிப்பூ வரத்து குறைவாக உள்ளதால் ரூ.200 வரை விலை கூடியுள்ளது. செவ்வந்தி வரத்து இல்லை. மழை, தண்ணீரின்றி செடிகள் வாடியதால் பூ வரத்து குறைந்து விட்டது, என்றார்.

## தேன் சேகரிப்பிற்கு நவீன கருவிகள் தாராளமாக மானியம் வழங்க முடிவு

**திண்டுக்கல்** : தேன் சேகரிப்பை ஊக்குவிப்பதற்காக, தோட்டங்களில் பெட்டிகள் அமைக்க முன்வரும் விவசாயிகளுக்கு ரூ. 17 ஆயிரம் மதிப்புள்ள நவீன கருவிகள், ரூ. 8 ஆயிரத்து 500 ல் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது.

மலைகளுக்கு மத்தியில் அமைந்துள்ள திண்டுக்கல் மாவட்டத்தில் தேன் சேகரிப்பு தொழில் ஒரு காலத்தில் பிரதானமானதாக அமைந்திருந்தது. வெளிநாடுகள் மற்றும் வெளி மாநிலங்களில் இருந்து வருபவர்கள், திண்டுக்கல்லில் இருந்து கொம்புத்தேன் பாட்டில்களை வாங்கிச் செல்வதை வழக்கமாக கொண்டிருந்தனர். தொழிலை மேம்படுத்துவதற்கான முயற்சிகள் மேற்கொள்ளப்படாததால்,

காலப்போக்கில் இந்த தொழில் நசிந்து போனது. தேன் எடுத்தலை முழுநேர தொழிலாக கொண்டிருந்த பலர், அதை புறக்கணித்து, கூலி வேலைகளுக்கு சென்று விட்டனர். தரம், மணம், குணம் என அனைத்திலும் முதன்மையானதாக திகழ்ந்த திண்டுக்கல் தேனிற்கு மீண்டும் முக்கியத்துவம் கொடுக்க தோட்டக்கலைத்துறையினர் முன்வந்துள்ளனர்.

முதற்கட்டமாக 200 விவசாயிகளுக்கு, 50 சதவீத மானியத்தில் இதற்கான கருவிகள் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. ஆயிரத்து 600 ரூபாய் மதிப்புள்ள தேன் பெட்டி ரூ. 800 க்கும், ஆயிரத்து 400 ரூபாய் மதிப்புள்ள தேனீக்கள் ரூ. 700 க்கும், 14 ஆயிரம் ரூபாய் மதிப்புள்ள கருவிகள் ரூ. 7 ஆயிரத்திற்கும் வழங்க முடிவு செய்யப்பட்டுள்ளது. இதன் மூலம் ஒவ்வொரு விவசாயியும், ரூ. 17 ஆயிரத்தில் அமைக்க வேண்டிய தேன் சேகரிப்பு தொழிலை ரூ. 8 ஆயிரத்து 500 ல் துவக்கலாம். மலை பகுதியில் வசிக்கும் விவசாயிகள் மற்றும் தோட்டங்களை வைத்திருப்பவர்கள், மீண்டும் தேன் சேகரிக்கும் தொழிலை துவங்க முன்வந்துள்ளனர்.

## கால்நடை மருந்தகத்தை இடம்மாற்ற கோரிக்கை

**வடமதுரை** : வசதிகள் இல்லாமல் சிறிய இடத்தில் செயல்படும் அய்யலூர் கால்நடை மருந்தகத்தை, அடிப்படை வசதிகளுடன் புதிய இடத்தில் செயல்படசெய்ய, கால்நடைத்துறையினர் நடவடிக்கை எடுக்கவேண்டும். அய்யலூர் தும்மனிக்குளத்தின் ஒரு பகுதியில் பேரூராட்சி அலுவலகம் அருகில் அரசு கால்நடை மருந்தகம் செயல்பட்டு வருகிறது.

திண்டுக்கல்- திருச்சி நான்கு வழிச்சாலை பணியில் அய்யலூாரில் ஆறு வழி மேம்பாலம் அமைந்ததால் கூடுதல் இடம் கையகப்படுத்தப்பட்டது. இதில் அய்யலூர் கால்நடை மருந்தகத்தில் பெரும் பகுதி இடமும், கட்டடமும் கையகப்படுத்தப்பட்டது. இவ்விடத்தில் தற்போது மேம்பாலத்திற்கான பல அடி உயரத்திற்கு மண் மேவி மேடாகிவிட்டது.

இதனால் மருந்தகத்திற்கு வரும் கால்நடைகள் மாடுகள் நிற்கவும், தண்ணீர் தொட்டி உள்ளிட்ட அவசிய தேவைகளை அமைக்க போதிய இடம் இல்லை.மழை நேரத்தில், வளாகத்தில் தேங்கும் நீர் வெளியேற வழியில்லாமல் கால்நடை மருந்தகத்தை சூழ்ந்து நிற்கும் அவலமும் ஏற்படுகிறது. போதிய வசதிகளுடன் புதிய

இடத்தில் கால்நடை மருந்தகத்திற்கு கட்டடம் கட்ட கால்நடைத்துறையினர் நடவடிக்கை எடுக்கவேண்டும்.

## பரண் மேல் ஆடு வளர்ப்பில் லாபம்; கூடுதல் வருவாயால் பலர் தீவிரம்

**திருப்புல்லாணி** : ராமநாதபுரம் அருகே திருப்புல்லாணியில் சுகாதாரமான முறையில் பரண் மேல் ஆடு வளர்ப்பில் கூடுதல் வருவாய் கிடைப்பதால், இம்முறையை பலர் கடைபிடித்து வருகின்றனர்.

திருப்புல்லாணி மேலபுதுக்குயிருப்பை சேர்ந்தவர் அயூப்கான், 52. சவுதியில் வேலை பார்த்த இவர், சில ஆண்டுகளுக்கு முன் ஊர் திரும்பினார். இவரது தென்னந் தோப்பை ஒட்டியுள்ள காலி இடத்தில், "ஷெட்' அமைத்து பரண் மேல் ஆடுகள் வளர்த்து வருகிறார். சுகாதாரமான முறையில் 110 ஆடுகள் வளர்க்கப்படுகின்றன. இந்த ஆடுகளுக்கு வெளிமார்க்கெட்டில் நல்ல வரவேற்பு இருப்பதால், கூடுதல் விலைக்கு விற்கப்படுகிறது. இதனால், பரண் மேல் ஆடு வளர்ப்பில் பலர் ஈடுபட்டு, அதிக லாபம் ஈட்டி வருகின்றனர். அயூப்கான் கூறியதாவது: சொந்த இடத்தில் ரூ. 13 லட்சம் செலவில் 3 "ஷெட்'கள் அமைத்துள்ளேன். வீரசோளம், எட்டையாபுரம் பகுதிகளில் இருந்து 5 லட்ச ரூபாய் செலவில் 17 கிடா, 17 பெட்டை ஆடுகள் வாங்கினேன். இதற்கு தேவையான தீவனம் கோ-4, கோ-3 என, புற்கள் வளர்த்து வருகிறேன். தவிர, தினமும் 300 கிராம் வீதம் மக்காசோளம், பட்டாணி, பச்சைப்பயறு போன்ற தானிய பயறு வகைகள் மாவுபோல் அரைத்து உருண்டையாக வழங்கப்படுகின்றன. இதன் மூலம் ஆடுகளுக்கு கொழுப்புச் சத்து அதிகம் கிடைக்கும். சினை பிடிப்பதற்காக, ஜமுனாபாரி வகை ரக ஆடு ஒன்று உள்ளது. இதுவரை, 34 ஆடுகள் குட்டி போட்டுள்ளன. ஆடுகளின் கழிவுகளை, தென்னைக்கு இயற்கை உரமாக பயன்படுத்தி வருகிறேன். உயிருள்ள ஆடு கிலோவிற்கு தகுந்தாற்போல் 6 ஆயிரம் முதல் 10 ஆயிரம் ரூபாய் வரை விற்கப்படுகிறது. ஆண்டிற்கு 4 முறை ஆந்த்ராக்ஸ் உள்ளிட்ட நான்கு தடுப்பூசிகள் போட்டு வருகிறேன். மேய்ச்சலுக்கு விடுவதில்லை. இதனால், ஆடுகள் சுகாதாரத்துடன் உள்ளன, என்றார்.

தினகரன்

## இன்றைய வேளாண் செய்திகள்

ஈஸ்டர் பண்டிகை முடிந்த பிறகும்

**கறிக்கோழி விலை ரூ.10 சரிவு உற்பத்தியாளர்கள் கவலை**



**கோவை:** கறிக்கோழி பண்ணை கொள்முதல் மொத்த விலை 4 நாளில் கிலோ ரூ.78லிருந்து ரூ.68க்கு குறைந்துள்ளது. கோவை, திருப்பூர் மாவட்டத்தில் கறிக்கோழி உற்பத்தி செய்யப்பட்டு, தமிழகம் மற்றும் கேரளாவிற்கு விற்பனைக்கு அனுப்பி வைக்கப்படுகிறது. உற்பத்தியாளர்கள் கறிக்கோழி விலையை தினசரி நிர்ணயித்து வருகின்றனர். அதன்படி பண்ணை மொத்த கொள்முதல் விலை, உயிருடன் சில்லரை விலை, தோலுடன் இறைச்சி விலை, தோல் நீக்கிய இறைச்சி விலை நிர்ணயம் செய்து விற்பனை செய்து வருகின்றனர்.

ஈஸ்டர் பண்டிகையை முன்னிட்டு கடந்த 40 நாட்களாக கிறிஸ்தவர்கள் விரதம் இருந்ததாலும், கடும் கோடை காரணமாகவும் கறிக்கோழி இறைச்சி நுகர்வு பொதுமக்களிடையே குறைந்தது. கடந்த 16ம் தேதி பண்ணை கொள்முதல் விலை ரூ.78 ஆகவும், தோலுடன் இறைச்சி கிலோ ரூ.150க்கும், தோல் நீக்கிய இறைச்சி கிலோ ரூ.160க்கும் விற்கப்பட்டது. ஈஸ்டர் பண்டிகைக்கு பின்னர் கறிக்கோழி

நுகர்வு அதிகரிக்கும், விலை உயரும் என்று உற்பத்தியாளர்கள் எதிர்பார்த்தனர். ஆனால், கடந்த 19ம் தேதி பண்ணை கொள்முதல் விலை ரூ.75க்கு குறைந்தது, நேற்று முன்தினம் (21ம் தேதி) விலை சரிந்து ரூ.73க்கு நிர்ணயிக்கப்பட்டது. நேற்று (22ம் தேதி) மேலும் சரிந்து ரூ.68க்கு நிர்ணயிக்கப்பட்டது. அதனடிப்படையில் சில்லரை விற்பனையில் தோலுடன் இறைச்சி ரூ.130க்கும், தோல் நீக்கிய இறைச்சி ரூ.140க்கும் விற்கப்பட்டது. கடந்த 4 நாளில் கிலோவுக்கு ரூ.10 குறைந்துள்ளது. ஈஸ்டர் பண்டிகைக்கு பின்னர் விலை உயரும் என்று எதிர்பார்த்த உற்பத்தியாளர்கள் விலை குறைந்ததால் கவலை அடைந்துள்ளனர்.

**வரத்து குறைவால் பச்சை மிளகாய் விலை உயர்வு**



**சேலம்**: தமிழகத்தில் கொளத்தூர், விளாத்திகுளம், சாத்தூர் உள்ளிட்ட பகுதிகளில் பச்சைமிளகாய் அதிகளவில் சாகுபடி செய்யப்படுகிறது. சேலம் மாவட்டத்தில் தலைவாசல், ஆத்தூர், மேச்சேரி, தாரமங்கலம், நங்கவள்ளி, அரூர், பாப்பிரெட்டிப்பட்டி, மாரண்டஹள்ளி, பாலக்கோடு, மொரப்பூர், சேந்தமங்கலம், பரமத்திவேலூர் உள்ளிட்ட பகுதிகளில் பச்சை மிளகாய் ஏக்கர் கணக்கில் சாகுபடி செய்யப்படுகின்றன. கடந்த இரு மாதமாக பச்சை மிளகாய் வரத்து அதிகரித்து இருந்ததால் விலை சரிந்தது.

இந்நிலையில் கடந்த சில நாட்களாக பச்சைமிளகாய் வரத்து குறைந்த தால் விலை உயர்ந்து வருகிறது. சேலம் மாவட்டத் தில் ஒவ்வொரு உழவர் சந்தைக்கும் தலா 300 கிலோ பச்சை மிளகாய் விற்பனைக்கு வரும். தற்போது விளைச்சல் பாதிப்பால் 200 கிலோ மட்டுமே விற்பனைக்கு வருகிறது.

இதனால் ரூ.26க்கு விற்கப்பட்ட ஒரு கிலோ பச்சைமிளகாய் ரூ.32 எனவும், வெளிமார்க்கெட்டில் ரூ.35 என விற்பனையாகிறது.

## மக்காச்சோளம் பயிரிட விவசாயிகள் ஆர்வம்

**வானூர்,**:வானூர்தாலுகா திருவக்கரை கிராமத்தில் தற்போது மானாவாரி பயிர் சாகுபடி செய்யப்பட்டு வருகிறது. கடந்த காலங்களில் கம்பு, கேழ்வரகு, சோளம் ஆகிய பயிர்களை விவசாயிகள் அதிக அளவில் சாகுபடி செய்து வந்தனர். தற்போது இதற்கு மாற்றாக மக்காச்சோளம் பயிரிடுவதில் விவசாயிகள் ஆர்வம் காட்டி வருகின்றனர். வறட்சியை தாங்கி வளர்வதால் இந்த பயிரை தேர்வு செய்து விவசாயிகள் அதிகளவில் பயிரிட்டுள்ளனர். குறைந்த காலத்தில் அறுவடைக்கு வருவதாலும், பனிப் பொழிவில் வளர்வதாலும் தற்போது கதிர்கள் நன்கு வளர்ச்சி அடைந்து காணப்படுகிறது.

## தரமான விதைகளை வாங்க விவசாயிகளுக்கு அறிவுரை

**ஊட்டி**, : விவசாயிகள், விதை விற்பனை பட்டியலில் பயிர், ரகம், குவியல் எண் காலாவதி நாள் குறிப்பிட்டுள்ளதா என்று பார்த்து தரமான விதை களை வாங்க அறிவுறுத்தப்பட்டுள்ளது.

விதை ஆய்வுத்துறை துணை இயக்குநர் பொன்னுசாமி நடேசன் வெளியிட்டுள்ள அறிக்கையில் கூறியிருப்பதாவது:

விவசாயிகள் காய்கறி விதைகளை வாங்கும் போது விதை விற்பனையாளர், விதை விற் பனை செய்வதற்கு உரிமம் பெற்றுள்ளாரா என்று பார்க்க வேண்டும். விதை கள் இருப்பு விவரம் மற்றும் விதைகளின் விலை விபரம் அறிவிப்பு பலகையில் குறிப்பிட்டுள்ளதா என்பது உள்ளிட்ட விதை விவர அட்டையில் உள்ளவைகளை சரிபார்த்து வாங்க வேண்டும்.

காலாவதியான விதை களை வாங்க வேண்டாம். வாங்கும் விதைகளின் முளைப்பு திறனுக்கான பகுப்பாய்வு முடிவின் உண்மை நகலினை பார்த்த பின்னர் வாங்கவும். விதை விற்பனை பட்டியலை விதை விற்பனையாளரிடமிருந்து தவறாமல் கேட்டு வாங்கவும். விதை விற்பனை பட்டியலில் பயிர், ரகம், குவியல் எண் காலாவதி நாள் குறிப்பிட்டுள்ளதா என்று பார்த்து வாங்கவும். விற்பனை பட்டியல் வாங்கும்போது, அனைத்து விவரங்களையும் சரிபார்த்து கையொப்பமிட்டு விற்பனையாளரின் கையொப்பத்துடன் பயிரின் அறுவடைக் காலம் வரை பத்திரமாக வைத்திருக்க வேண்டும். விதைகள் விதைத்தபின் விதை

கொள்கலன்களை பயிரின் அறுவடை காலம் வரை வைத்திருக்க வேண்டும். இவ்வாறு அதில் தெரிவிக்கப்பட்டுள்ளது.

**இயற்கை விவசாயம் செய்தால் 30 சதவீதம் நீரை சேமிக்கலாம்**

**ஈரோடு,** : இயற்கை விவசாயம் செய்வதன் மூலம் 30 சதவீதம் நீரை சேமிக்கலாம் என தமிழக உழவர் தொழில்நுட்ப கழக தலைவர் சுந்தரராமன் தெரிவித்துள்ளார். ஈரோடு மாவட்டம் சத்தியமங்கலத்தில் 22ம் ஆண்டு உலக தண்ணீர் தினவிழா மற்றும் இயற்கை வேளாண்மை கருத்தரங்கம் நடந்தது. நிகழ்ச்சிக்கு மாவட்ட விவசாயிகள் சங்க ஒருங்கிணைப்பாளர் காசியண்ணன் தலைமை தாங்கினார். விழாவில், பவானிசாகர் அணை கோட்ட செயற்பொறியாளர் நடராஜன் கலந்து கொண்டு நீரை சேமிக்க எளிய வழிகள் என்ற புத்தகத்தை வெளியிட்டு பேசினார். அப்போது அவர் பேசுகையில், உலக தண்ணீர் தினம் 1993ம் ஆண்டு ஐக்கிய நாடுகள் சபையில் அறிவிக்கப்பட்டு நீர் பற்றிய விழிப்புணர்வை உண்டாக்க கொண்டாடப்பட்டு வருகிறது. எதிர்கால நீரின் நிலையை கருத்தில் கொண்டு குடும்பத்தில் உள்ள அனைவரும் நீரை சிக்கனமாக பயன்படுத்த வேண்டும். வீடுகளில் சமையல் அறை, கழிப்பறை, குளியல் அறை ஆகியவற்றில் உரிய அளவு குழாய்களை பயன்படுத்த வேண்டும். வீடுகளில் மழை நீரை சேமிக்கும் வகையில் கட்டுமானங்களை அமைக்க வேண்டும். மொத்த நீரில் 69 சதவீதம் விவசாயத்திற்கும், 23 சதவீதம் தொழிற்சாலைகளுக்கும், 8 சதவீதம் குடிநீருக்கும் பயன்படுத்தப்படுகிறது. எதிர்கால சேமிப்பிற்கு அனைவரும் ஒருங்கிணைந்து தண்ணீரை சேமிக்க வேண்டும் என்றார்.

விழாவில் சிறப்பு அழைப்பாளராக தமிழக உழவர் தொழில்நுட்ப கழக தலைவர் சுந்தரராமன் கலந்து கொண்டு இயற்கை வேளாண்மை என்ற தலைப்பில் பேசியதாவது:

இயற்கை விவசாய சூழலை உருவாக்கி அடுத்த தலைமுறையை காப்பாற்றுவது தான் நோக்கமாக இருக்க வேண்டும். நீர் மாசுபட்டால் அனைத்து பொருளுமே வீணாகிவிடும். தானிய சாகுபடி 60 சதவீதம் குறைந்து பருத்தி சாகுபடிக்கு மாற்றப்பட்டது.

விவசாயத்தில் ரசாயன முறை, இயற்கை முறை என இருபக்கங்கள் உள்ளது. சுற்று சூழலுக்கு இணைந்து இயற்கை விவசாயம் செய்தால் 30 சதவீத நீரை

சேமிக்கலாம். தற்போது இயற்கை வேளாண்மைக்கு என தனியாக துறை பல்கலைக்கழகத்தால் தொடங்கப்பட்டுள்ளது.

இன்றைய சூழலில் இயற்கையோடு இணைந்து ரசாயன உரங்களின் தேவையினை குறைத்து இயற்கை எருக்களை இட்டு மண்ணை வளமடைய செய்தால் நல்ல மகசூல் கிடைக்கும். இவ்வாறு அவர் பேசினார்.

நிகழ்ச்சியில் பவானி நதிநீர் பாசன பாதுகாப்பு சங்க தலைவர் ராமசாமி, கவுந்தப்பாடி நுகர்வோர் பாதுகாப்பு அமைப்பு தலைவர் சென்னியப்பன், பகிர்மான கமிட்டி தலைவர் நடராசு, அரக்கன்கோட்டை பாசனசபை தலைவர் சிரில் சார்லஸ், மாவட்ட உழவர் விவாதக்குழு செயலாளர் வெங்கடாசலபதி, பெரியகொடிவேரி பேரூராட்சி முன்னாள் தலைவர் முத்துசாமி உட்பட பலர் கலந்து கொண்டனர்.